Reg. M. 2330. "SIDDHANTHAM" Vol. 16. No. 1

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 16	சித்திரபானுஞு தைமீ 1943ஞு ஜனவரிமீ	இதழ் 1

பத்திராசிரியர் :—திரு. P. R. சுவாமிநாதன், M.A., L.T.
சைவ சித்தாந்த மகா சமாஜம்
திருவருளகம், 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை
ஆண்டுச் சந்தா ரூபா 2 தனிப்பிரதி அணு 3

நமது சமாஜ விழா

[காரியதரிசி]

நமது சமாஜத்தின் முப்பத்தேழாவது ஆண்டு நிறைவு விழாவும் சைவர் மகா நாடும் சீகாழியில் மஹாமஹோபாத்தியாயர் - பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையிலும், சைவ இளைஞர் மகா நாடு திரு. கா. இராமநாத செட்டியாரவர்கள், B.A., B.L. தலைமையிலும், சென்ற 25-12-1942 வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. முதல் நாட் காலையில் 6 மணிக்குத் திருக்கோயில் வழிபாடும் "சீகாழித் தி[illegible]டு" என்ற நூல் வெளியீடும் நடந்தவுடன் [illegible]லமாக மேளவாத்ய யானை வரிசைகளுடன் [illegible] காலை 10 மணிக்குப் பேரவை கடவுள் [illegible]ங்கிற்று. திருக்கயிலாய பரம்பரைத் திருத் [illegible]நபத்து நான்காவது மஹா[illegible] சந்நிதானமாக,

எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் திருவுளப்பாங்கின்படி அருளிய திறப்புரையை அச்சிட்டு வழங்கி ஷெ ஆதீனத் திருக்கூட்டத் தம்பிரான் சுவாமிகளுள் ஒருவராகிய ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் வாசித்துப் பேரவையைத் திறந்து வைத்தார்கள். பின்னர் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் மெய்கண்டார் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார்கள். பிறகு தலைவர் நியமனம் முடிந்தவுடன் வரவேற்புக்கவி வாசித்து வழங்கப் பெற்று, ஆண்டறிக்கையும் அங்கீகரிக்கப்பட்டது. பின்பு வரவேற்புக் கழகத் தலைவர் திரு. S. சுப்பராய முதலியாரவர்கள் தமது வரவேற்புரையை நிகழ்த்தினார்கள் (இது அடுத்த இதழில் வெளிவரும்.) பிறகு தலைவரவர்கள் சமயவுணர்ச்சியும் இலக்கியச் சுவையும் செறிந்த தமது அருமையான தலைமையுரையை நிகழ்த்தினார்கள். (இதன் சுருக்கம் அடுத்த இதழில் வெளிவரும்). பிறகு இளைஞர் மகா நாட்டுத் தலைவரவர்கள் தமது அருமையான தலைமையுரையை நிகழ்த்தினார்கள் (இதன் சுருக்கம் அடுத்த இதழில் வெளிவரும்). பிறகு திருமுறை முழக்கத்துடன் காலைக்கூட்டம் முடிந்தது.

பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை சைவ இளைஞர் மகா நாடு நடைபெற்றது. (இவ்விளைஞர் மகா நாட்டின் நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக இக்கட்டுரையின் பிற்பகுதியிற் குறித்துள்ளோம்.) மாலை 5 மணிக்கு மீண்டும் சைவர் மகாநாடு தொடங்கிற்று. திருத் தருமபுர ஆதீனத் திருக்கூட்டத் தம்பிரான்களுள் ஒருவராகிய ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "சைவ சமய குருகுலம்" என்பது பற்றியும், தூத்துக்குடி சித்தாந்த போதகப் பேராசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் " சுட்டுணர்வுக்கெட்டாத ஒன்றைச் சுட்டிக் காட்டிய ஒருவர் " என்பது பற்றியும், பெரியபுராணப் பேருரையாசிரியர் சிவக்கவிமணி - திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் " சம்பந்தரும் அப்பரும் " என்பது பற்றியும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் வித்வான் - திரு. மு. அருணாசலம் பிள்ளையவர்கள் "வாதவூரடிகள்" என்பது பற்றியும் அரிய இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

தலைவரவர்கள் தமது கருத்துரையை அவ்வப்போது தெரிவித்தார்கள். முதல்நாட் கூட்டம் கடவுள் வாழ்த்துடன் இரவு $9\frac{1}{2}$ மணிக்கு முடிந்தது.

இரண்டாம்நாட் காலையில் 7 மணி முதல் 10 மணி வரை சைவ இளைஞர் மகாநாடு நடந்தது. பிறகு ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திருவுருவப்படத்தைத் திரு. க. அரங்கசாமி முதலியாரவர்கள் குரு பக்தியும் மெய்யுணர்ச்சியும் நிரம்பியதொரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தித் திறந்து வைத்தார்கள். பிறகு திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் முதலிய பல அன்பர்கள் சுவாமிகளுடைய அருமை பெருமைகளை விரித்துரைத்தார்கள். திரு.கா. இராமநாதன் செட்டியாரவர்கள் சுவாமிகள் நினைவு நிதிக்குப் பொருளுதவுமாறு பேரவையினரை வேண்டினார்கள். (நினைவு நிதிக் கணக்கை அடுத்த இதழில் காண்க.) பிறகு தமிழிசை மணி - திருநெல்வேலி - உயர்திரு. சுந்தர ஓதுவார் மூர்த்திகள் அவர்களுடைய திருவுருவப்படத்தைத் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் சிறந்த பாராட்டுரையோடு திறந்து வைத்தார்கள். திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் முதலியோர் ஓதுவார் மூர்த்திகளுடைய அருமை பெருமைகளைப் புகழ்ந்து பேசினார்கள். பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை சைவ இளைஞர் மகாநாடு நடைபெற்றது. மீண்டும் 4 மணிக்குச் சைவர் மகாநாடு தொடங்கிற்று. திவான்பகதூர் - T. M. நாராயணசுவாமிப் பிள்ளையவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளைப்பற்றிய பாராட்டுரையை நிகழ்த்தினார்கள். வித்வான் - திரு. ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் "சம்பந்தரைப் புகழும் நூல்கள்" என்பது பற்றியும், திரு. பூ. சமரபுரி முதலியாரவர்கள் "திருப்பாசுரம்" என்பது பற்றியும் அரிய இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பிறகு திரு. க. அரங்கசாமி முதலியாரவர்களுடைய இளைய புதல்வியார் திருவளர்செல்வி-ர. சேது அம்மையாரவர்கள் "முருகன் பெருமை" என்பது பற்றித் திருமுருகாற்றுப்படை, கந்தபுராணம், கந்தர் கலிவெண்பா, அருணகிரிநாதர் திருவாக்கு, திருப்போரூர்ச் சந்நிதிமுறை முதலிய பல மேற்கோட் செய்யுட்களோடு மிகத் தெளிவாகவும் இனிமையாகவும்

றுதன் முறையாகப் பேரவையில் முன்வந்து நிகழ்த்திய சொற்பொழிவு அனைவருக்கும் பெருமகிழ்ச்சியை விளைவித்தது. (இச்சொற்பொழிவின் சுருக்கம் மேமீ இதழில் வெளிவரும்.) இதன் பிறகு திரு. கா. இராமநாதன் செட்டியாரவர்கள் "நியமம்" என்பது பற்றியும், சிவஸ்ரீ ஈசான சிவாசாரியரவர்கள் "கண்ணப்பர்" என்பது பற்றியும் அரிய இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவரவர்கள் தமது கருத்துரையை அவ்வப்போது தெரிவித்தார்கள். இரண்டாம்நாட் கூட்டம் கடவுள் வாழ்த்துடன் இரவு 9½ மணிக்கு முடிந்தது.

மூன்றாம் நாள் காலையில் 7 மணி முதல் 9 மணி வரை சமாஜக் காரியக்கூட்டம் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் தலைமையில் நடந்தது. இதில் 1943ஆம் ஆண்டிற்குரிய சமாஜ உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் பெற்றனர். (இவர்கள் திருப்பெயர்கள் அடுத்த இதழில் வெளிவரும்.) காலை 9 மணிக்குச் சைவர் மகாநாடு தொடங்கிற்று. இவ்வாண்டில் வெற்றிபெற்ற மாணவர் அறுவர்க்குச் சைவப்புலவர், இளஞ்சைவப் புலவர் என்ற பட்டங்கள் வழங்கப்பட்டன. அடுத்தஆண்டு நிறைவிழாவை மதுரையம்பதியில் நடத்துமாறு மதுரைத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருமடத்தின் சார்பாக அழைத்தனர். காரியதரிசியும் சமாஜத்தின் சார்பாக ஒப்புக்கொண்டனர். பிறகு திரு. C. S. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் "திருவெழுகூற்றிருக்கை" என்பது பற்றியும், திரு. G. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., B.L. "கோவணக் கள்வர்" என்பது பற்றியும் அரிய இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பிறகு திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், எம். ஏ., எம் எல். "மூப்பயன்" என்பதுபற்றி ஆராய்ச்சித்திறமை மிக்கதொரு சிறிய சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை சைவ இளைஞர் மகாநாடு நடந்து முடிவெய்தியது. மீண்டும் 4 மணிக்குச் சைவர் மாநாடு தொடங்கிற்று. திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் "சம்பந்தர் காலத்திய அரசியல் நிலை" என்பது பற்றி அரிய இனியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பிறகு தலைவரவர்கள் "திருவெம்பாவை" என்பது பற்றிப் பல அன்பர்கள்

வேண்டுகோட்கிணங்கி மிக அருமையானதொரு சொற்பொழிவை நிகழ்த்திப் பைங்குவளைக்கார் மலரால், முன்னிக்கடலைச் சுருக்கி, போற்றியருளுக என்ற மூன்று பாக்களுக்குப் பரந்த விரிவுரை செய்து முடித்தார்கள். பிறகு சமாஜக் காரியதரிசி திருமடத்தினர், சைவர் மகாநாட்டுத் தலைவர், சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைவர், படத்திறப்பாளர்கள், சொற்பொழிவாளர்கள், திருமுறை ஓதியவர்கள், வரவேற்புக் கழகத்தினர், பேரவையினர் முதலிய அனைவருக்கும் நன்றிகூறினர். பிறகு வரவேற்புக் கழகத்தின் சார்பாகத் திரு. ராவ்சாஹெப் C. S. ஸ்ரீநிவாஸ முதலியாரவர்களும், ஸ்ரீமான் T. திருவேங்கடம் பிள்ளையவர்களும் நன்றிகூறினார்கள். பிறகு திரு. புரிசை முருகேச முதலியாரவர்கள் "புராணங்களின் உட்கருத்து" என்பதுபற்றியும், திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் "பழஞ் சைவமும் புது உலகமும்" என்பது பற்றியும் அரிய இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். சைவர் மகாநாட்டுத் தலைவரவர்களும் சைவ இளைஞர் மகாநாட்டுத் தலைவரவர்களும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். சைவ இளைஞர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் திரு. இ. சிவகுருநாதனவர்களால் வாசிக்கப்பட்டன. மூன்று நாட்களிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழிசை ஆசிரியர்களாகிய திருவாளர்கள் மு. நடராஜ ஓதுவாரவர்களும், மு. சுப்பிரமணிய முதலியாரவர்களும் ஸ்ரீலஸ்ரீ ஞானியார்சுவாமிகள், உயர்திரு - சுந்தர ஓதுவார் மூர்த்திகள் நினைவுக் கீர்த்தனைகளையும் பிற கீர்த்தனைகளையும் பாடிப் பேரவையை மகிழ்வித்தனர். தில்லைவாழந்தணருள் ஒருவரும் சில கீர்த்தனைகளைப் பாடினர். ஸ்ரீலஸ்ரீ மஹாசந்நிதானத்தின் ஆசீர்வாத வுரையை அச்சிட்டு வழங்கி ஸ்ரீமத் அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் வாசித்து அனைவருக்கும் ஆசீர்வாத மளித்தனர். திருமுறை முழக்கத்துடன் நிறைவுவிழா நிறைவெய்தியது. வாழ்கசீர் அடியாரெல்லாம்.

சைவ இளைஞர் மகாநாடு :—இது நமது சமாஜ விழா நாட்கள் மூன்றிலும் [illegible] நடைபெற்றது. முதல் நாள் காலையில் தலைமையுரை நிகழ்ந்தது. அன்று [illegible]லையில் பன்னிரண்டு சொற்பொழிவுகளும்,

அடுத்தநாட் காலையில் ஒன்பது சொற்பொழிவுகளும் மாலையில் ஒன்பது சொற்பொழிவுகளும் இரவிலும் மூன்றும் நாட் பிற்பகலிலும் பதின்மூன்று தீர்மானங்களின் நிறைவேற்றலும் நிகழ்ந்தன. சொற்பொழிவுகளின் விவரம்: (ஒவ்வொரு சொற்பொழிவாளர் பெயர்முன் திரு என்றும் பின் அவர்கள் என்றும் சேர்த்து வாசிக்கவும்) 25-12-42 வெள்ளி மாலையில் (1) நாற்படி - மயிலம் தமிழ்க் கல்லூரி எழுத்தாளர் - அம்பை - சங்கரனார் (2) சைவ அனுஷ்டானம் - சிதம்பரம் - K. முத்துகிருஷ்ண பிள்ளை (3) தமிழ்ச் சொல் மலர் - மயிலம் தமிழ்க்கல்லூரி ஆசிரியர் - வித்வான் சு. சண்முகனார் (4) வித்தகம் பேசவேண்டாம் பணி செய்யவேண்டும் - மறை திருநாவுக்கரசனார் (5) நால்வர் தந்த தேவாரம் - இராமலிங்க தேசிகர் (6) இடைக்காடர் பிணக்கு - கன்னியாகுடி - சு. இராமசாமிப் பிள்ளை (7) சைவத்தில் வீரம் - N. தண்டபாணிப் பிள்ளை (8) சில அனுபவம்-T. நல்லசிவன் பிள்ளை, B.A., B.L. (9) சைவத்தில் பெண்மணிகளின் நிலைமை - C. D. காந்திமதி யம்மையார் (10) தமிழ்மறையின் அனுபவம் - A. லக்ஷ்மண பிள்ளை (11) எப்படி உணர்வது? - R. மகாதேவன் (12) கடமை - சீகாழி - வி. சுந்தரனார். 26-12-42 சனிக்கிழமை காலையில் (13) சிறுவர்கடமை - சமாஜப் பொதுக் காரியதரிசி (14) தருமம் - காஞ்சிபுரம் - ம. பொ. அண்ணாமலை முதலியார் (15) தமிழர் மதம் - சீகாழி வித்வான் ஞானசம்பந்தம் பிள்ளை (16) சைவத்தொண்டு - வில்வாரணி - செ. வேங்கடராம செட்டியார் (17) சில கருத்துக்கள் - திரிசிராப்பள்ளி தமிழாசிரியர் R. பஞ்சநதம் பிள்ளை (18) அன்பு மதம் - வில்வாரணி - அ. கன்னையன் (19) நான்கண்ட அத்துவிதம் - விமலாநந்த சுவாமிகள் (20) நால்வர் தமிழ் - காஞ்சிபுரம் குமாரசாமி அடிகள் (21) சேக்கிழார் தொண்டு - சி. பாலசுப்பிரமணியனார். சனிக்கிழமை மாலையில் (22) பக்குவம்-சிதம்பரம் முருகையாகுருக்கள் (23) காழி-க. சுப்பையா பிள்ளை (24) நன்றி - திருநாகேச்சுரம் சதாசிவாநந்த அடிகள் (25) வழிபாடு-வித்வான் - இ. சிவகுருநாதன் (26) அவதார புருஷரின் அரிய குணங்கள் - மணப்பாறை P. M. முத்து மல்லா ரெட்டியார் (27) அன்பு நிலை - குஞ்சிதபாதம் பிள்ளை, B.A., B.L.

(28) நம் சமய நிலை - கும்பகோணம் - சே. பழனிவேல் (29) திருமூலர் - கும்பகோணம் - கோ. சாமிநாத பிள்ளை.

சைவ இளைஞர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் கீழ்வருவனவாகும் :—(1) இவ்வூரில் சிறந்த சைவத் தமிழ்ப்புலவராயிருந்த தருமபுர ஆதீன வித்வான் வித்வசிகாமணி - ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளையவர்களின் பிரிவுக்கு இம்மாநாடு பெரிதும் வருந்துகிறது. (2) இவ்வூர்ப் புகைவண்டி நிலையத்திலே "சிய்யாழி" என்று எழுதியிருப்பதை மாற்றிச் "சீகாழி" என்று திருத்த முயற்சி எடுத்துக்கொள்ளுமாறு இவ்வூர்ப்பெருமக்களையும், தவறுள்ள வேறு ஊர்ப்பெயர்களையும் அவ்வாறே திருத்த முயலுமாறு அவ்வவ் ஊர்ப் பெருமக்களையும் இம்மகாநாடு வேண்டுகிறது. (3) தமிழ் நாட்டிலுள்ள சைவர்கள் அனைவரும் தங்கள்தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம் முதலிய சிறப்புக்களில் தமிழ் மொழியிலேயே சைவர்களைக்கொண்டு நடத்தவேண்டுமென்று இம்மாநாடு சைவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது. (4) ஆண்டுதோறும் வடமொழியில் சிரோமணி பட்டம் பெற்றவர்களில் ஒருவரை அரசாங்கத்தார் ஆராய்ச்சி மாணவராக எடுத்துக்கொள்வதைப் போன்று தமிழ்மொழியிலும் வித்வான் பட்டம் பெற்றவர்களில் ஒருவரை ஆராய்ச்சி மாணவராக ஏற்றுக்கொள்ளும்படி இம்மகாநாடு சென்னை கல்வித்துறைத் தலைவரை (D. P. I.) வேண்டுகிறது (5) எம். ஏ. வகுப்புக்குரிய விருப்பப் பாடங்களுள் ஒன்றாகிய சித்தாந்த நூல் படிப்பாரற்று விலக்கப்பட்டிருக்கின்றது. இதை விருப்பப் பாடமாக எடுத்து கொள்வாருக்குத் திங்கள்தோறும் உதவிச் சம்பளம் கொடுத்துச் சித்தாந்தக் கல்வியை வளர்க்குமாறு சைவ மடாதிபதிகளை இம் மகா நாடு கேட்டுக் கொள்ளுகிறது. (6) சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பயிலுவதற்குத் தக்காரைக்கொண்டு ஆங்காங்கு நலப்பட்டதோர் இடத்தில் கோடைக்கால வகுப்புகள் நடத்தி வைக்குமாறு ஆங்காங்குள்ள சைவப் பெரியார்களையும் சைவத் திருமடத் தலைவர்களையும் இம்மகா நாடு வேண்டுகிறது. (7) தமிழிசை இயக்கத்தை ஊக்கத்துடன் வளர்க்குமாறு சைவப் பெருமக்களை இம்மாநாடு வேண்டுகிறது. (8) தமிழ் நாட்டிலுள்ள கோயில்களில் உயிர்ப்

பலியிடும் வழக்கத்தை நிறுத்தும்படி அவ்வக்கோயிற் பாதுகாப்பாளர்களை இம்மகா நாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது. (9) திருக்கோயில்களில் அர்த்த மண்டபத்திற்குள் பூசையும் பணியும் செய்வோரன்றி மற்ற எவரும் நுழைதற்கு விடுதலாகாது; இன்றேல் வேறுபாடின்றி எவரும் விடப்படவேண்டும். இது குறித்துச் சைவ இளைஞர்களை ஆங்காங்கு விரிவுரையாற்றிக் கிளர்ச்சி செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது. (10) சிவநெறிக் கருத்துக்களைக் கூறும் இன்றியமையாத சொற்களெல்லாம் தனித் தமிழாக வெளியிட வேண்டுமெனவும் பேசுவோர் எல்லாரும் அச்சொற்களையே கையாள வேண்டுமெனவும் வெளியீட்டாளர்களையும் சொற்பொழிவாளர்களையும் இம்மாநாடு வேண்டுகிறது. (11) நம் பள்ளிகளில் தக்காரைக்கொண்டு மெய்ந்நூலறிவு புகட்டுவதுடன் மெய்ந்நூற் பகுதியைத் தலைமைப் பாடமாகக் கொண்ட கல்லூரிகள் காண வேண்டுமென்று இம்மகா நாடு சைவப் பெருமக்களை வேண்டுகின்றது. (12) மகா நாடு நடைபெறும் ஊருக்கு அண்மையில் சமாஜத்தின் மூலம் கிராமத் தொண்டுசெய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், தொடக்கமாக ஆண்டு விழாவை ஒட்டியாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், இம்மா நாடு தீர்மானிக்கிறது. (13) சைவ சித்தாந்த சாத்திரங்களில் முதனூலாகிய சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரங்களின் கருத்துக்களை மற்றைய சாத்திரங்கள் இன்னும் இவைகட்கு ஒற்றுமையான சமய நூற்கள் மேற்கோள்களோடு பன்னிரண்டு வகையாக உபந்யாசங்கள் தயாரித்து அவைகளை நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு சூத்திரக் கருத்துக்களையும் ஒருவர் அல்லது பல பேர்களைக்கொண்டு பேசச் செய்து, மற்றவர்களைக் கேட்டுச் சிந்தித்து அபிப்பிராய பேதங்களை நீக்கிக்கொண்டு ஒரே கருத்துடையவராய்ச் செய்துகொள்ளவேண்டும். அந்த ஏற்பாட்டை முதலில் தக்கவர்கட்குத் தெரிவித்து முடிவு செய்து கொள்ளவேண்டும்.

திருக்கோவலூராதீனம், திருப்பாதிரிப்புலியூர்
ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்
தோற்றம் : ஸ்ரீமுக - வைகாசி - மூலம் - 17-5-1873
திருவருட் கலப்பு : விசு - தை - பூசம் 1 - 2 - 1942

சிவமயம்

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க

திருப்பாதிரிப்புலியூர்

உயர்திரு ஞானியார் அடிகள்

குரு பூஜை

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருரூபஞ் சிந்தித்தல் தானே.

திருக்கைலாய பரம்பரை, திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் அருள்திரு ஞானியார் மடாலயத்து ஐந்தாம்முறைத் தலைவராய, **சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்,** கடந்த விசு, கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாள் திருவருணையில் தீப தரிசனம் கண்டும், மார்கழியில் திருச்சிராப்பள்ளி நூற்றுக்கால் மண்டபத்தில், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 36-ம் ஆண்டு விழாத் தலைமை தாங்கியும் தைப்பூசத்தில் பழநியங்கிரிவாழ் பண்ணவன் அடியில் பன்மலரிட்டு வணங்கியும் சிவத்தொண்டுகள் தமிழ்த்தொண்டாற்றி வரும் வழியில் பழநிக்கருகில் ஆறு மைல் தூரத்தில் திருப்பழநியாண்டவர் திருவடிப்பேற்றை எய்தினர். இப்பரமாசாரிய குருமூர்த்திகளின் **முதல் ஆண்டுக் குருபூஜை** நிகழும் சித்திரபாநு தைத்திங்கள் 8-ந் தேதி பூசநாள் (21-1-43) காலை 9 மணிக்குத் திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் கோயில்

கொண்டெழுந்தருளிய ஸ்ரீ வல்லீதேவசேநாசமேத சுப்ரமணிய மூர்த்திக்கு அபிஷேக ஆராதனைகளும், 10 மணிக்கு சமாதித் தோட்டத்தில் குருமூர்த்திகள் வழிபாடும், 12 மணிக்கு மாகேஸ்வர பூஜையும், மாலை முதல் இரு தினங்களில் (21, 22 ஜனவரி 43) சென்னை அறநிலைய பாதுகாவற் கழகத் தலைவர் **திவான்பஹதூர் - T. M. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள்,** M.A.,B.L. அவைத் தலைமையில் விரிவுரைகளும் அடியிற்காணும் முறைப்படி நடை பெறும்.

அன்பர்கள் வந்து தரிசித்து, கேட்டு மகிழுமாறு விரும்புகிறோம்.

திருப்பாதிரிப்புலியூர் }
1—1—'43 }

இங்ஙனம் :
சுவாமிகள்
ஸ்ரீமத் ஞானியார் மடாலயம்

நிகழ்ச்சி முறை

1943 ஜனவரி 21 வியாழக்கிழமை

மாலை	6 — 6- 5	கடவுள் வணக்கம், தலைவர் வரவேற்பு
,,	6- 5— 6-45	தலைவர் பேருரை
,,	6-45— 7-30	சுவாமிகளின் உருவப்படத் திறப்பு—திருவாளர் - திரு. வி. கலியாண சுந்தரனாரவர்கள்
,,	7-30— 8-15	திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள், B. A., B. L., சென்னை —"பித்தர் கூட்டம்"
,,	8-15— 9	திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், B. A., L. T., ஜில்லா கல்வி அதிகாரி, வடார்க்காடு—"ஞானியார் அடிகள் காட்டிய நன்னெறி"
,,	9	தலைவர் முடிவுரை

1943 ஜனவரி 22 வெள்ளிக்கிழமை

காலை	9 —11	ஸ்ரீமத் சுவாமிகளின் மாணவர் கூட்டம்
மாலை	4 — 4-30	பிரம்மஸ்ரீ O. R. இரகுபதி சாஸ்திரியார் அவர்கள், B.A.. B.L., கடலூர்—"ஞானியார் சுவாமிகள் நினைவு"
,,	4-30— 5	திரு. சிவசுவாமி தேசிகர் அவர்கள், கச்சி ஆளவந்தார் ஆதீனம், காஞ்சிபுரம்—"குருபரன் வருவது எப்போது"
,,	5 — 5-30	வித்வான் - திரு. சா. பெரியசாமிப் பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ் ஆசிரியர், போர்ட் ஹைஸ்கூல், பரங்கிப்பேட்டை—"குரு பக்தி"
,,	5-30— 6	வித்வான் இ. சிவகுருநாதன் அவர்கள், தமிழாசிரியர், போர்ட் ஹைஸ்கூல், விருத்தாசலம்—"வழிபாடு"
,,	6 — 6-30	திரு. பட்டம்மாள் அவர்கள், தமிழாசிரியர், கவர்ன்மெண்ட் பெண் ஹை ஸ்கூல், கடலூர்—"நான் கண்ட ஞானியார் சுவாமிகள்"
,,	6-30— 7	திரு. பண்டிதநாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், தலைவர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை,—"திருத்தொண்டின் உறைப்பு"
,,	7 — 7-30	தலைவர் முடிபுரை
,,	7-30— 8	நன்றியுரை

Sadhu Press, Ma[illegible]

உ

வேலுமயிலும் துணை

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க

கு ரு து தி

[ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியர் அவர்கள் அருளிச் செய்தது]

சிறப்புரை

ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டினைப் பெற்று அவர்க்கு அருள் செய்தற்கு எல்லாம் வல்ல இறைவன் கொண்ட வடிவங்கள் மூன்று. அவை குரு லிங்கம் சங்கமங் கள் ஆகும். லிங்கம் ஆலயத்துள் அமர்ந்து அருள் செய்யும் இயல்பினையுடையது. ஏனைய இரண்டும் எங்கும் சரித்து அருள்வன. குருவுரு தன்னையும் மற்றைய இரண்டின் இயல் பினையும் எடுத்து உரைத்து வீட்டு நெறிக்கு உரியவைகளையும் போதிக்கும். கடவுள் இல்லை என மறுப்பாரும் குருவை மறுக் காது வழிபடுவர். அத்தகைய குருமார்கள் பலபேர் உலகில் தோன்றினர். அவருள் ஒருவர் சென்ற ஆண்டு பழநியில் பரசிவ லிங்கத்திற் கலந்த திருஞானியார் அடிகளார். அவர் திருக்கைலாய பரம்பரைத் திருக்கோவலூராதீனத்து திரு ஞானியார் மடாலயத்து ஐந்தாம் முறையாக வந்த தலைவர். இவர், நல்லார் - பொல்லார், ஆண் - பெண், அன்பர் - அன் பிலர், தன் சமயத்தவர் - பிற சமயத்தவர் என வேற்றுமை நாடாது, அவர்கள்பால் அருள் சுரந்து, அமர்ந்து, இனிது ஒழுகி அவர்கள் உள்ளத்தழுக்கைப் போக்க ஞான உபதேசம் செய்தவர். தமிழ் உலகெங்கும் சொன்மாரி பெய்து, தமிழ்ப் பயிரினையும் சைவப் பயிரினையும் வளர்த்தவர். இவர் மறை விற்கு மனங் கலங்காதவர் ஒருவரும் இலர். இத்தகைய பெரு மானார், தமக்கு வினைவழி வந்த கால்ஊனத்தைப், பல சிகிச்சை யினாலும் தீர்க்க இயலாது மருத்துவர் கைவிட, குரு துதி கொண்டு தீர்த்துக்கொண்டனர். அப்பாக்களுள் சிதைந்தன பல; கிடைத்தன சில. அவைகளை ஒருங்கு திரட்டி அன்பர் கள் ஓதி யருள்பெற அச்சிடுவித்தனன்.

சிவமயம்

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க

உலகி லுயர்ஞான மோங்க வுதித்தாய்
தலைமைபெறு ஞானமெனச் சாற்றி—மலநீங்க
நின்னை யடைந்தேனை நீயே யகற்றிவிடின்
தன்னை யறிவேனோ சாற்று. 1

கோவற் பதிவாழ் குருபரனே யாறுமுக
தேவவெனக் கியாவருளர் செப்புவாய்—ஓவலிலா
ஆணவத்தி லாழ்ந்த யறிவினேற் கொளிஞானம்
பூணுறச்செய் வாரைப் புகன்று. 2

புகலாக நின்பாற் புகுந்தேனைக் காத்து
நிகரிலா ஞானநோ் வித்து—தகைபெறுநன்
தாமரைநோ் சீரடியிற் சார்விக்க வேண்டுகிறேன்
கோமளமார் ஞானகுரு வே. 3

கொடியேனை யாண்டு குறையகற்றத் தோன்றிப்
படியாதி தத்துவத்தின் பாங்கை—மடியுடையேற்
கைய மகல அறிவித்த ஞானகுரு
வையமதி லாறுமுக வன். 4

வன்னெஞ்சே யாறுமுக வள்ளல் குருராயன் [னெடுநாள்
பொன்னடியைப் போற்றுதற்குப் போற்றுவம்வா—நின்
பன்னாளு மொத்துநடந் தென்ன பயன்கண்டேன்
என்னெடுவா வுண்டுபய னெண். 5

எண்ணம் பலநமக் கிவ்வுலகிற் செய்யபல
எண்ணுவன செய்ய இயலவில்லை—எண்ணியதைச்
செய்யும் வலந்தந்து செய்விப்பா னாறுமுக
அய்ய னவனடிசேர்ந் தால். 6

அன்பரெலாம் போற்றுமெழி லாறுமுக குருவை
இன்புறுவா னெய்தினேன் ஏழையேன்—துன்பமெலா
மோட்டினான் இன்ப உருவாகத் தானிருத்தல்
காட்டினான் கண்டுகொள வே. 7

கண்டுணர வல்லேனோ காட்டாயே யிவ்வுலகிற்
பண்டைமல வாணவத்தால் பாழ்பட்டேன்—தொண்டர்க்கு
வேண்டுநலங் கூட்டுவிக்கும் வித்தகனே யாறுமுக
ஆண்டவனே செய்க அருள். 8

அப்பணியுஞ் செஞ்சடையெம் அப்ப னருட்பெருக்கால்
இப்புவியோ ருய்ய எழுந்தருளும்—ஒப்பில்
உருவே யருவே யுபயமே ஞானம்
குருவே யருள்வதெந்நாள் கூறு. 9

காயமே மேலாக் கருதுமய லென்றொழியும்
ஆயபொரு ளாசை யகல்வதென்றோ—தூயர்
துதிக்குமுயர் கோவற் சுருதிசொல் தேவே
கதிக்குமுநின் தாளே கதி. 10

கதியெனக்குன் காற்கமலம் காண்பார் வியக்கும்
மதியெனக்குன் வாய்வருநல் வாய்மை—பதியெனக்கு
நீயன்றி வேறுண்டோ நேரில் குருபரனே
தாயன்றிச் சேய்க்குயார் சாற்று. 11

முன்னைந் தெழுத்தின் முதலி லுளநமவைப்
பின்னைந் தெழுத்தினிலே பின்னிறுத்திப்—பின்மூன்றாற்
காரண வைந்தைக் கழறியாட் கொண்டனையே
ஆரணஞ்சொல் கோவலழ கா. 12

ஒன்றுக்கும் பற்றேனை யுன்னியன் றாட்கொண்டாய்
இன்றேன் விடுகின்றா யெங்குருவே—என்றும்
இயல்பொன் றுயர்ந்தோர்க் கென்பர் பெரியார்
மயல்போக்கு மாகுரு வே. 13

நின்னரு ளின்றே னிலையின் புறுவேனோ
முன்வரு மாறு முககுருவே—இன்னலெலாம்
பாற்றி யிருவினையாற் பாரிலுதிக் காவண்ணம்
தோற்றுவா யென்னைத் தெரிந்து. 14

மறதி மிகவுடையேன் வந்துனிணை வாழ்த்தேன்
பிறராற் பெருமதிப்பைப் பேணித்—தறையினில்யான்
குற்றம் பலசெய்வேன் கோவற் குருபரவென்
பற்றற நீகடைக்கண் பார். 29

பார்த்து விடிலென்றன் பாவம் பறைதருமே
தீர்த்தந் தருகோவற் றேசிகனே—மூர்த்தம்
நினைநினைக்கின் ஞானநிலை நேர்ந்திடுமென் றோர்வேன்
தனைநினைக்கத் தண்ணளிசெய் வாய். 30

பொய்யகன்ற நிட்டானு பூதியைநான் வாசியேன்
செய்ய நினதடியைச் சிந்தனைசெய்—துய்யும்
வகையறியேன் கோவல் வருகுருவே வாழ்த்துந்
தகைநீ யெனக்கறியச் சாற்று. 31

சாற்றுநா ளென்றோ தருகோவ லாரியனே
மாற்றந் தெரிந்துரைக்கு மாண்பிலேற்—காற்றவுமே
போற்று மறைமுடியிற் பொன்றா வொருமொழியென் 32
ஏற்ற முறுமொழியை யே.

ஒருமொழியை நீயருளி னுற்றிடுவே னின்பம்
ஒருமொழியே யின்ப முறுவிக்கும்—ஒருமொழியுந்
தேறா வடியேன் தெளிந்தின்பம் பெற்றிடுவான் 33
பேறாங் குருபரநீ பேசு.

பேசிடுவேன் வீண்சொற்கள் பேசிப் பயன்சொற்கள்
ஆசகல நின்றிலனென் னாரியனே—பாசமைந்தும்
பாற்றிப் பதிஞானம் பல்குமா பார்த்தருள்செய் 34
தேற்று தொழினின தே.

மருவார்ந்த கொன்றையணி வள்ளல்வாழ் கோவற்
குருமணியை ஞானமிலேன் கூடித்—திருவென்பாள்
கண்ணருள் பெற்றேன் கலைமா னருள்பெற்றேன் 35
எண்ணு முமையருளோ டிங்கு.

இங்கன்றி யங்கும்யா னின்பம் பெறுதற்குப்
பொங்குசிவ ஞானம் பொருந்துவேன்—எங்கும்
நினதுருவாக் கண்டு நிலைத்தசுகம் என்றே
அனக பெறுவ தறை. 36

குருவரு ளின்றிக் குலவுவாழ் வுண்டோ
குருவரு ளின்றிக் குறுகும்—திருவுண்டோ
எல்லாரும் போற்று மெழிற்கோவ லாறுமுக
நல்லானே நல்குதிரு வாழ்வு. 37

நின்னருளி னாயேன் நினைப்பேன் நினதடியை
நின்னருளி னாயேன் நிகழ்த்துவேன்—நின்புகழை
நின்னருளி னாயேன் நினைவணங்கும் பேறுற்றேன்
என்ன குறையு மிலேன். 38

குறையேது நினையடைந்த கூரறிஞர் கட்கு
மறையோது ஞான வள்ளால்—தறையில்
உயர்கோவல் வந்த உறுவர் கோவே
மயர்வகற்றி யாள்கசுரு வே. 39

குருவே குருவே குருவே குருவே
குருவே யெனப்பலகால் கூறி—வருவேன்
பலநாளா கோவற் பதிவாழ் குருவே
நலவழியி லென்னை நடத்து. 40

எல்லாஞ் சிவமென் றியம்பவுங் கேட்டேற்குப்
பொல்லா வினைகள் பொருந்துதலால்—நல்ல
அறிவெய்தப் பெற்றிலனே யாரியனே நின்னைக்
குறிக்கும் வழியினை நீ கூறு. 41

நின்றாட் கமலமலர் நீதியறி யேன்றலையிற்
பொன்று வழகாப் பொருந்தாதோ—குன்றாத
கோவலூர் ஞான குருபரனே யாறுமுக
தேவவெனை நீயருளாற் றேற்று. 42

தேற்றிடினீ யானுந் தெளிவுறுவே னின்னருளாற்
போற்றி வழிபடுவேன் புன்மையேன்— ஆற்றுள்ளே

முன்வரு பெண்ணை முழுதணியுங் கோவல்வாழ்
பன்னுகுரு வேகடைக்கண் பார். 43

நீசொல் உபதேசம் நித்தலு நான்செபியேன்
தேசஞ்சொ லாறுமுக தேசிகனே—மாசற்ற
நல்லொழுக்கங் கல்விவளம் நல்லவர்த நட்புடனே
நில்லென் றொருசொல் நிகழ்த்து. 44

தெரிவையர்த மாசை திகழாசை யாசை
விரிநிலத்தி னாசை விரும்பி—உரவோர்
துதிகோவ லாறுமுக தூயகுரு நின்னைக்
கதியென் றடையேனைக் கா. 45

தக்கதொரு காலத்தில் தக்கதொரு நல்லிடத்தில்
தக்கதொரு சாதனையைச் சாதித்துத்—தக்கவர்கள்
போற்று குரு வாறுமுக புங்கவநிற் சாரேனைத்
தேற்றுவ தெந்நாளோ செப்பு. 46

என்னைப் பொருட்படுத்தி யென்னைநீ கொண்டதன்றித்
தன்னையெனக் கீந்த தயாநிதியே—பன்னுவதென்
நின்னை மறப்பனெனி னீசனே னுய்வேனோ
மன்னுகோ வற்குரு வே. 47

குருபூஜை யாலே குவலயம் ஓங்கும்
குருபூஜை யாலே குடிகள்—மருவுவரே
செல்வம் புகழாயுள் சேர்ந்த வுளமனைவி
புல்லும் புதல்வர்தம் பேறு. 48

கோவல்வாழ் ஞான குருபூஜை செய்தோர்கள்
தாவில் வளமிகவித் தாரணியில்—ஓவாது
பெற்றுவப்ப தன்றியே பேரின்ப மும்பெறுவர்
கற்றவர்கள் சொல்வதிது காண். 49

Printed at the Sadhu Press, 12, [illegible] Mudali Street, Royapettah, by T. V. V[illegible]an[illegible]han (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvaru[illegible]", 22-A Kallukaran Street, Mylapore, Madras.